# இரட்சிக்கப்பட்ட பாவம் செய்தால்

- தேவனுடைய பிள்ளை நிரந்தரமாக பாவத்தில் இருப்பதில்லை.
- மறுபடி பிறந்தவர்கள் பாவத்திலே இருந்துவிடும் திருப்தி அவனுக்கு இருப்பதில்லை.
- எந்த கர்த்தருடைய பிள்ளைகளும் மாம்சத்தின் காரியங்களிலே வாழ்வதினாலே மகிழ்ச்சியாய் இருப்பதில்லை.
- பாவத்திலே வாழும் போது தேவனால் பயன்படுத்த முடியாது.
- பாவத்தை செய்து கொண்டிருப்போமானால், மாம்சத்தில் வாழ்ந்து கொண்டிருப்போமானால் தேவன் நம்மோடு ஐக்கியமாயிருக்க முடியாது, சக விசுவாசிகளோடும் ஐக்கியம் கொள்ள முடியாது.

தேவனுடைய பிள்ளை:

- தொடர்ந்து பாவம் செய்ய மாட்டான்
- பாவ பழகத்தில் இருக்க மாட்டான்
- பாவத்திலே மகிழ்ச்சியாக, திருப்தியாக இருக்க முடியாது
- பாவத்தில் இருக்கும் போது வேதனைப்படுகிறான், துக்கப்படுகிறான், சமாதானமில்லாமல் இருப்பான்.

- இயேசு கிறிஸ்துவிடம் பாவத்தை அறிக்கைச் செய்து விட்டுவிடும் போது சமாதானம், மகிழ்ச்சி பெற்றுக் கொள்கிறான்.

விசுவாசி எப்போதாவது பாவம் செய்கிற பரிசுத்தவான்

பாவத்திலே தொடர்ந்து நீடிப்பவன் அல்ல.

அனைத்து விசுவாசிகளும் தவறி விழக்கூடிய நிலையில், பாவம் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். (1யோவான் 1:8,10 யாக்கோபு 3:2)

இரட்சிப்பு

- விசுவாசி பாவம் செய்து பின் பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்பினால் தேவன் மன்னித்து காயங்களை குணமாக்குவார் ஆனால் **‘தழும்பை அகற்றமாட்டார்’**
- மனதிலும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் செய்யும் பாவங்கள் சரீர பிரகாரமான பாவங்களை விட கேடானது. (யாக்கோபு 4:1–4, 1 யோவான் 2:15–17).
    - பலர் கூறுவது ‘நான் பயங்கரமான பாவங்களில் இல்லை’ என்கிறவர்களே TV, Internet–இல் அப்படிப்பட்ட பாவங்களை பார்ப்பதில் மிக வாஞ்சை உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் உள்ளத்தின் ஆழத்திலே அது தான் அவர்கள் வாழ்க்கையாகிருக்கிறது.
    - பாவத்தை எப்படி செய்தார்கள் என்று வர்ணிக்கிறவர்கள் அதை அறிய விரும்புகிறவர்கள். அப்படிப்பட்ட பாவங்களை அவர்களும் நேசிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.
- விசுவாசி தவறான காரியத்தை செய்துவிட்டால் அதைக்குறித்து இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் வந்து அழுது கொண்டிருப்பான்.
- நான் செய்த இந்த காரியத்தை வெறுக்கிறேன் என்று தான் புலம்பிக் கொண்டிருப்பான்.
- கர்த்தருடைய பிள்ளையாயிருந்து உங்கள் வாழ்க்கையில் அறிக்கையிடாத பாவம் இருக்கும் என்றால்,
    - வேதம் வாசிக்க,
    - ஜெபிக்க
    - ஆலயம் செல்ல
    - விசுவாசிகளின் ஐக்கியத்தில்,

இவற்றில் விருப்பமிருக்காது.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- ஏனெனில் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். (1 யோவான் 1:9) இயேசு கிறிஸ்து கழுவி சுத்திகரிக்கும்படி அறிக்கை செய்ய வேண்டியதை அறிக்கை செய்ய வேண்டும். அறிக்கை செய்ய தவறும் போது உணர்ந்து அறிக்கை செய்யும் வரைக்கும் சிட்சித்து சீர்படுத்துகிறவராய் இருக்கிறார். (2 கொரிந்தியர் 7:9, எபிரேயர் 12:5,6)

**<u>கிருபை இழந்து போகிறவன்:</u>**

- தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருக்கிறவன் கிருபையை இழந்து போவான். (எபிரேயர் 12:15)
- இயேசு கிறிஸ்துவின் மேலே தன் கண்களை பதிக்காவிட்டால் கிருபையை மிக எளிதாக இழந்து போக வாய்ப்பிருக்கிறது.
- தங்கள் சொந்த கிரியை, முயற்சியில் நம்பிக்கை தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தால் கிருபை இழந்து போவான். (கலாத்தியர் 5:4)
- தொடர்ந்து நீங்கள் பாவத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பீர்களென்றால், இயேசு உங்கள் எஜமானாய் இருக்க முடியாது.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்